ZONE - I

திருவள்ளூர் மாவட்ட அரசினர் செய்தித்தாள்

துணை வெளியீடு - பிப்ரவரி 1998.

# திருவொற்றியூர் நகராட்சி விளம்பரம்

திருத்தப்பட்ட 1920-ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 249, 255, 258, 259 மற்றும் 270 உட்பிரிவின் படி தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் ஆகிய பிரிவுகளின்கீழ் செய்யப்படும் விளம்பரம்.

திருவொற்றியூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அபாயகரமானதும் அருவருக்கத் தக்கதுமான தொழில்களுக்கு வசூலிக்கப்பட்டு வந்த உரிமையாணைக் கட்டணத் தொகையை 25.04.97-ஆம் தேதிய மன்றத் தீர்மானம் எண்.1336ன் படி 01.04.98 முதல் திருத்தியமைத்து வசூல் செய்ய திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணைக் கட்டணத்திற்கு ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ ஏதும் இருப்பின் அதனை 29.12.97ந் தேதிக்குள் நகராட்சி அலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி 15.12.97 அன்று செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்கண்ட தேதி வரை ஆட்சேபனைகளோ அல்லது ஆலோசனைகளோ இந்நகராட்சிக்கு வரப்பெறவில்லை என்பதினால் திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணைக் கட்டணத்தின் விபரத்தினை மாவட்ட அரசிதழில் வெளியிட 27.01.98ந் தேதிய நகரமன்றத் தீர்மானம் எண்.2938ல் தீர்மானிக்கப்பட்டது.

எனவே, இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விகிதாச்சார அட்டவணையில் கண்டுள்ள மாற்றி அமைக்கப்பட்ட கட்டணம் 01.04.98 முதல் அமுலுக்கு வரும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

திருவொற்றியூர் நகராட்சி.
நாள் : 06.02.98

ஒம்/- எஸ். மெய்யழகன், எம்.ஏ.,
ஆணையர்,
திருவொற்றியூர் நகராட்சி

# திருவொற்றியூர் நகராட்சி

01.04.98 முதல் அபாயமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் மற்றும் வியாபாரங்களுக்கு மாற்றி அமைத்து வசூல் செய்ய உத்தேசித்துள்ள புதிய உரிமையாணைக் கட்டணம் - ஓர் ஆண்டிற்கு :

| வரிசை எண் 1 | வியாபாரம் மற்றும் தொழில்களின் விபரம் 2 | நகராட்சி சட்டபிரிவு எண் 3 | திருவொற்றியூர் நகராட்சி பழைய கட்டணம் 4 | புதிய கட்டணம் 5 | நகரமன்ற தீர்மானத்தின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டணம் 6 |
|---|---|---|---|---|---|
| | | செக்சன்-249 ஷெட்யூல் | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | அழுக்கான துணிகளை சுத்தப்படுத்துதலும் சுத்தப்படுத்த வைத்திருக்கும் துணிகளையும் சுத்தப்படுத்தப்பட்ட துணிகளையும் வைத்திருப்பது. | (ஏ) | 25 | 100 | 100 |
| 2. | நெல் வேகவைக்கும் அல்லது அரைக்கும் இடத்திற்கு. | (பி) | | | |
| | | " | 200 | 500 | 400 |
| | அ) நெல் சேமித்து வைக்க | " | 100 | 300 | 200 |
| | இ) அரிசி மொத்த விற்பனை | " | 100 | 500 | 300 |
| | ஈ) அரிசி சில்லரை விற்பனை | " | 25 | 250 | 100 |
| | உ) கற்பூரம் தயாரித்தல் | " | 200 | 400 | 400 |
| 3. | மாட்டு கொழுப்பு அல்லது கந்தகத்தை உருக்குவது. | (சி) | 200 | 400 | 400 |
| 4. | அ) எலும்பு, கொம்பு போன்றவைகளை சேகரித்து வைப்பது (அ) விற்பனை செய்வது. | (டி) | 200 | 500 | 500 |
| | ஆ) ஆடு, மாடு இவற்றின் தோல் விற்பனை செய்வது. | " | 50 | 250 | 250 |
| | இ) இரத்தம் (அ) கந்தல்துணி (அ) கொழுப்பு முதலியவற்றை சேர்த்து வைத்தல் (அ) வேறு ஏதாவது செய்தல் | " | 50 | 200 | 200 |
| | ஈ) மீன் (அ) கருவாடு விற்பனைக்காக மொத்தமாக சேர்த்து வைப்பது. | " | 50 | 500 | 500 |